22.08.2023
அசல் வழக்கு எண்: 29/2022

வா.சா.1 சாட்சி குமாரம்மாள் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

வா.சா.ஆ.1 பட்டா பாஸ் புத்தகத்தில் சர்வே எண். 60/7 ல் 70 செண்டு என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். பவர் பத்திரத்தை வா.சா.ஆ. 2 ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பவர் பத்திரத்தை பூச்சம்மாளுடன் சேர்ந்து 5 நபர்கள் கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். கிரைய ரசீதை வா.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த ரசீது கிரைய தொகையாக எவ்வளவு பணம் செலுத்தப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. பூச்சம்மாளின் கணவர் பெருமாள்நாயக்கருக்கு தாவா சொத்து ஆதியில் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ. 4 ரசீதில் பூச்சம்மாள் தனக்கு பூர்வீக பாத்தியப்பட்டது என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். பவர் பத்திரம் 5 நபர்கள் சேர்ந்து எழுதிகொடுத்துள்ள நிலையில் வா.சா.ஆ 4 ரசீதில் பூச்சம்மாள் மட்டும் தனக்கு பாத்தியப்பட்ட இடம் என்று கூறி பணத்தை பெற்றுக்கொண்டதாக உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 2 மற்றும் வா.சா.ஆ. 4 ஆகிய ஆவணங்களில் உள்ள பூச்சம்மாளின் கைரேகை வெவ்வேறானவை என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 4 ஆவணம் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. பூச்சம்மாளின் கைரேகையை நிரூபணம் செய்வதற்கு மேற்கண்ட 2 ஆவணங்களை தவிர வேறு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பூச்சம்மாளின் கணவர் பெயர் பெருமாள் நாயக்கர் என்ற பொன்னையா நாயக்கர் என்று காட்டுவதற்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை தவிர வேறு

ஆவணங்கள் உள்ளதா என்றால் அவர் பெயர் பெருமாள் நாயக்கர் தான் பொன்னையா நாயக்கர் கிடையாது.

பிரதிவாதி கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகலை நான் வா.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்துள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதி உண்மையான பூச்சம்மாள் மற்றும் அவரது வாரிசுதாரர்களிடம் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 5 ஆவணத்தில் நான்குமாலில் தங்களுக்கு அதாவது பூச்சம்மாளுக்கு சொந்தமான நிலத்திற்கு வடக்கு என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. மேற்படி கிரைய ஆவணத்தில் 55 செண்டு போக மீதமுள்ள 15 செண்டு வடக்கே உள்ளது என்றால் சரியல்ல.

நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 6 வில்லங்க சான்றிதழில் பிரதிவாதி கார்த்திகேயன் 19.04.2000 தேதியன்று கிரையம் வாங்கியதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதி 19.04.2000 தேதியன்று பூச்சம்மாளின் வகையறாவிடமிருந்து சர்வே எண். 60/7 ல் 55 செண்டு 60/8 ல் 22 செண்டு மொத்தம் 77 செண்டு பதிவு கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. மேற்கண்டவாறு பிரதிவாதி கிரையம் வாங்கிய சொத்திற்கு பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் பொய்யாக பட்டா பெறப்பட்டுள்ளது. மீதமுள்ள 15 செண்டு கூட்டுப்பட்டாவாக உள்ளது என்றால் சரியல்ல.

சர்வே எண். 60/7 பூச்சம்மாள் மற்றும் கார்த்திகேயன் பெயரில் அடங்கள் கணக்கு ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கிரையம் வாங்கிய சொத்துக்களை பிரதிவாதிதான் தற்போது வரை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் கடந்த 2021 அக்டோபர் மாதம் தாவா இடத்தை அளக்க சென்றேன் என்றால் சரிதான். ஆனால் அளக்க விடவில்லை. தகராறு செய்து விட்டார்கள். அதன் பிறகு அளவிடு

செய்யாமலேயே எனது பெயரில் பட்டா பெற்றுவிட்டேன் என்றால் சரிதான். எனது பெயரில் பட்டா மாற்றப்பட்டது தெரியவந்து கோட்டாட்சியரிடம் மனு கொடுத்தார் என்றால் சரிதான். அந்த மனுவின் ந.க.எண். அ 3/3973/2021 என்றாலும் அதில் எனது தரப்பில் ஆஜராகி பதிலுரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 2021ம் தேதிவரை நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

இந்த வழக்கில் முதல் பரிகாரமாக பிரதிவாதி கிரையம் பெற்ற கிரைய ஆவணம் செல்லத்தக்கது அல்ல என்று கேட்டுள்ளேன் என்றால் சரிதான். 2வது பரிகாரமாக பிரதிவாதி எனது அனுபவத்தை இடையூறு செய்யக்கூடாது என்ற நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். 2வது பரிகாரத்தில் சர்வே எண். 60/7 தற்போது 60/7A வாக உட்பிரிவு செய்யபட்டுள்ளது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி உட்பிரிவு சம்பந்தமாக பிராதில் வேறு எங்கும் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் விளம்புகை பிரிகாரம் கேட்டிருக்கவேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்தை பிராதில் கண்ட 2 இலக்க சொத்துக்களில் எந்த இலக்க சொத்திற்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை.

2வது இலக்க சொத்தில் தெற்கே சர்வே எண். 60/7B ல் பூச்சம்மாள் வகையறா இருப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 2 பவர் பத்திரத்தில் தெற்கேயும், மேற்கேயும் காரத்திகேயன் இடம் என்று சொல்லியுள்ளேன் என்றாலும் பிராதில் மாற்றி சொல்லியுள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் கிரையம் வாங்கிய தேதிக்கு முன்பாகவே கார்த்திகேயன் கிரையம் வாங்கிவிட்டார் என்றால் அவர் கிரையம் வாங்கியது எனக்கு தெரியாது. இந்த வழக்கு காலவரையறை

தோஷத்திற்கு உட்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 6 மற்றும் 7 ஆகிய ஆவணங்களில் பூச்சம்மாளுக்கு சர்வே எண். 60/7ல் 70 செண்டு என்றுதான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய பூச்சம்மாளும், பிரதிவாதி கிரையம் வாங்கிய பூச்சம்மாளும் வெவ்வேறான நபர்கள் என்றால் நான் வாங்கிய பூச்சம்மாள்தான் உண்மையான உரிமையாளர். பிரதிவாதி வாங்கிய பூச்சம்மாள் வேறு நபர் ஆகும். நான் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

என்னிடம் காட்டப்படும் நான் கிரையம் பெற்ற கிரைய ஆவணமான வா.சா.ஆ. 2 ஆவணத்தில் 1 வது பக்கத்தில் பின்புறம் உள்ள பச்சை நிரமுள்ள புடவை அணிந்துள்ள நபர்தான் நிலத்தின் உரிமையாளர் என்றால் சரிதான். பூச்சம்மாளின் கணவர் பெயர் தெரியுமா என்றால் பெருமாள் நாயக்கர் ஆவார். பூச்சம்மாள் எனக்கு என்ன உறவுமுறை என்றால் அத்தை முறை ஆகும்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் தாக்கல் செய்துள்ள பிராதில் பூச்சம்மாள் எனக்கு உறவுமுறை என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லியுள்ளேன். கிரையம் ஏற்பட்ட காலத்தில் பவர் எழுதிகொடுத்த பூச்சம்மாள் உயிருடன் இருந்தாரா என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.